பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 02 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - அமெரிக்கா இடையே கனிமவளம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் ஒத்துழைக்க Pax Silica ஒப்பந்தந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

2. அருணாச்சலப்பிரதேசம் மற்றும் மிஸோரம் மாநிலங்களின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

3. அனைவருக்கும் சமநீதி, பரஸ்பர மரியாதை உள்ளிட்டவை வலுவான சமூகத்திற்கு அடித்தளமாக உள்ளதாக மத்திய சமூகநீதித் துறை அமைச்சர் திரு. டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

4. ஈரான், ரஷ்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி ஓமன் கடல்பகுதியில் நடைபெற்றது.

5. வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - அமெரிக்கா இடையே கனிமவளம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் ஒத்துழைக்க Pax Silica ஒப்பந்தந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற நிகழ்ச்சியில், இதுதொடர்பான ஒப்பந்தத்தில்

கையெழுத்திடப்பட்டுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்னவ் தெரிவித்துள்ளார்.

செமிகண்டக்டர் மற்றும் மின்னணு தொழில்துறைகளில் இந்தியா உலக அளவில் முன்னணி நாடாக வளர்ந்து வருவதாக கூறினார்.

செமிகண்டக்டர் தொழில்துறையில் பயிற்சி பெற்ற 10 லட்சம் பேர் தேவை என்று கூறிய திரு. அஷ்வினி வைஷ்ணவ், நாட்டின் 315 பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் நானோ மீட்டர் Chip வடிவமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. Sergio Gor, இந்தியாவும் அமெரிக்காவும் பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக கூறினார்.

Pax Silica ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா – அமெரிக்கா இடையே தடையற்ற வர்த்தகத்தை மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலக அளவில் வளர்ச்சியடைந்து வருவதாக திரு. Sergio Gor கூறினார்.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பல்வேறு நிறுவனங்களின் தலைமைச் செயலதிகாரிகளுடன் குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் ஆலோசனை மேற்கொண்டனர்.

இதுகுறித்து, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னேறி வருவதாக தலைமைச் செயல் அதிகாரிகள் கூறியுள்ளதை அவர் சுட்டிக்கட்டியுள்ளார்.

இந்த செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் நடைபெற்று வருவதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், சுகாதாரம், சைபர் பாதுகாப்பு, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

அருணாச்சலப்பிரதேசம் மற்றும் மிஸோரம் மாநிலங்களின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அம்மாநிலங்களின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவில், நாட்டின் வளர்ச்சிக்காக அருணாச்சலப்பிரதேசம் மற்றும் மிஸோரம் மாநில மக்கள் ஆற்றிவரும் பணி போற்றத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அருணாச்சலப்பிரதேசம், கலாச்சாரம், சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வளத்தில் செழிப்பான மாநிலமாக திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

மிஸோரம் மாநிலத்தில் எழுத்தறிவு பெற்றோரின் சதவீதம் அதிகமாக உள்ளதாக அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், கலாச்சாரம் மற்றும் நல்லிணக்கத்தில் அருணாச்சலப் பிரதேசம் எடுத்துக்காட்டாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மிஸோரம் மாநிலத்தின் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், அருணாச்சலப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

மிஸோரம் மாநிலம், அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் வளர்ச்சி அடையட்டும் என்றும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

ஷில்லாங் மக்களவைத் தொகுதி உறுப்பினர் டாக்டர் ரிக்கி A.J. Syngkon நேற்று மாலை மாரடைப்பால் காலமானார், அவருக்கு வயது 54.

வடகிழக்கு மாநிலமான மேகாலயா, தேசிய அரசியல் சூழலில் செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், டாக்டர் ரிக்கி A.J. Syngkon மேற்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று மாலை Mawiong என்ற இடத்தில் Futsal விளையாட்டின் போது அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டதாகவும், உடனடியாக மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றதாகவும், மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கிறன.

அவரது மறைவை அடுத்து மேகாலய சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படவிருந்த பட்ஜெட், ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Conrad Sangma தெரிவித்துள்ளார்.

அவரது மறைவுக்கு, தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மேகாலயா மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்த டாக்டர் Syngkon-னின் மறைவு ஈடுசெய்ய முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், பொதுவாழ்வில் தமது பகுதி மக்களின் நல்வாழ்விற்காக தம்மையே அர்ப்பணித்தவர் டாக்டர் Syngkon என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமது அயராத பணியால் மேகாலயா மக்களின் நினைவில் டாக்டர் Syngkon என்றும் நிலைத்து நிற்பார் என்று கூறியுள்ளார்.

இந்த துயரமான நேரத்தில், அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும், கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>><<<<<**

அனைவருக்கும் சமநீதி, பரஸ்பர மரியாதை உள்ளிட்டவை வலுவான சமூகத்திற்கு அடித்தளமாக உள்ளதாக மத்திய சமூகநீதித் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

உலக சமூகநீதி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை அடிப்படையில், திட்டங்களின் பயன்கள் அனைவருக்கும் சென்றடைய அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் பின்தங்கிய மற்றும் பிற்படுத்தப்பட்டோரின் நலனுக்காக அனைத்து நலத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

>>>>><<<<<

இந்தியாவும், பிரேஸிலும் இயற்கை விவசாயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பிரேஸில் வேளாண்துறை அமைச்சர் Carlos Favaro-வுடன் ஆலோசனை மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலும், பிரேஸிலின் வேளாண் கல்விக் கழகமும் இதுதொடர்பாக இணைந்து செயல்படவுள்ளதாக தெரிவித்தார்.

பயறு வகைகள், ஒருங்கிணைந்த விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாட்டின் வேளாண் துறை வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறினார்.

வேளாண் துறை ஆராய்ச்சி மையத்தை இந்தியாவில் அமைக்க பிரேஸில் ஒப்புக் கொண்டுள்ளதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, இடைக்கால் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு இன்று பதிலுரை ஆற்றினார்.

இந்த பதிலுரையை புறக்கணித்து, அஇஅதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

ஐந்தாண்டு கால ஆட்சியின் இறுதிகட்டமாக, இடைக்கால பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று நிறைவு பெறுகிறது.

>>>>><<<<<

தேர்தல் முறைகேடு தொடர்பாக, பீகாரைச் சேர்ந்த 28 சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு பாட்னா உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எதிராக தேர்தல் முறைகேடு தொடர்பாக புகார்கள் வரப்பெற்றுள்ளதை அடுத்து இந்த விசாரணை நடைபெற்று வருகிறது.

இதனை விசாரித்த பாட்னா உயர்நீதிமன்ற நீதிபதி திரு. Shashi Bhushan Prasad Singh, நீதிபதி திரு. அஷோக்குமார் பாண்டே ஆகியோர் கொண்ட அமர்வு, இந்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

>>>>><<<<<

ஈரான், ரஷ்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி ஓமன் கடல்பகுதியில் நடைபெற்றது.

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து, இந்த கூட்டுப் பயிற்சி முக்கியத்துவம் பெறுகிறது.

ஈரானின் போர்க்கப்பலான Alvand, ஏவுகணை தாங்கிய போர்க்கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், சிறப்பு அதிரடிப் படைகள் உள்ளிட்டவை இந்த கூட்டுப் பயிற்சியில் இடம்பெற்றன.

ஈரானின் இஸ்லாமிக் புரட்சி பாதுகாப்பு படையினர், Hormus ஜலசந்தியில் போர்ப்பயிற்சி மேற்கொண்ட பின், ஓமன் கடல்பகுதியில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

சர்வதேச அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட வேண்டும் என்று வலியுறுத்தி, அமெரிக்கா 15 நாட்கள் காலக்கெடு விதித்துள்ளது.

**>>>>><<<<<**

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் இன்று நடைபெற்ற இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா ஏ அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை-ஏ அணியை வென்றது.

முதலில் பேட் செய்த இலங்கை ஏ அணி 19 புள்ளி 4 ஓவரில், 118 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

119 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா ஏ அணி, 13 புள்ளி 3 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை எட்டியது.

**>>>>><<<<<**

சிங்கப்பூர் Smash டேபிள் டென்னிஸ் போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Snehit, 11-6, 5-11, 11-5, 11-7 என்ற செட்கணக்கில் Benin நாட்டின், Abdel Kader-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகதிச் சுற்று ஆட்டத்தில், Diya Chitale, 9-11, 8-11, 13-11, 11-2, 11-5 என்ற செட்கணக்கில் போலந்தின் Wegrzyn-ஐ வென்றார்.

**>>>>><<<<<**

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் கோவா இன்று முஹமதன் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி கொல்கத்தாவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>END<<<<<**